TNNM080003342026

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்

திருச்செங்கோடு

முன்னிலை:– திரு. P. ரங்கராஜ், B.A.B.L.,

நீதித்துறை நடுவர், திருச்செங்கோடு

சுருக்கு விசாரணை வழக்கு எண்.155/2026

2026– ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 31–ம் நாள் திங்கட்கிழமை

| | |
|---|---|
| குற்றமுறையீட்டாளர் | அரசுக்காக,<br>சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்,<br>எலச்சிபாளையம் காவல் நிலையம்,<br>குற்ற எண்.204/2025 |
| குற்றம் சாட்டப்பட்டவர் மற்றும் முகவரி | ரங்கநாதன் (வயது 51)<br>த/பெ. பழனிவேலு,<br>2/225, மாராயி காடு, குமரமங்கலம், 87 கவுண்டம்பாளையம்,<br>திருச்செங்கோடு வட்டம்,<br>நாமக்கல் மாவட்டம். |
| வனையப்பட்ட குற்றங்கள் | சட்டப் பிரிவுகள் 281, 125(b) BNS. |
| குற்றம் நிகழ்ந்த நாள் | 20.12.2025 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | 09.01.2026 (Bailed by police) |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 07.04.2026 |
| பிரிவு 274 BNSS – ன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | 15.05.2026 |
| சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள் | 24.06.2026 |

RANGARAJ P
Digitally signed by RANGARAJ P
Date: 2026.08.31 19:04:10 +0530

| | |
|---|---|
| சாட்சிகள் விசாரணை முடிவடைந்த நாள் | 17.08.2026 |
| பிரிவு 351(1)(ஆ) BNSS இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 28.08.2026 |
| தலைமறைவு எதிரி குறித்த விவரம் | Nil |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம் | Nil |
| முடிவு | இவ்வழக்கின் எதிரி, சட்டப் பிரிவுகள் 281, 125 (b) BNS – ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து, பிரிவு 278(1) BNSS –ன் கீழ் எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |

இவ்வழக்கானது 07.04.2026-ம் தேதி இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் அ. உதயபானு, B.com.,B.L., நிலை 2 அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.கனகமணி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களும் கேட்டு ஆவணங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

01) கடந்த 20.12.2025–ம் தேதி இரவு 21.00 மணிக்கு எலச்சிபாளையம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட திருச்செங்கோடு to இராசிபுரம் ரோடு எலச்சிபாளையம் பஸ் ஸ்டாப் அருகிலுள்ள சண்முகா ஜவுளி ஸ்டோர் அருகில் சாட்சி–2 சித்ரா என்பவர் வடக்கிலிருநது தெற்கு நோக்கி ரோட்டின் ஓரமாக

சென்றபோது, கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த TN 34 AJ 9502 என்ற பதிவெண்கொண்ட TVS Electric IQ – SMARTXOWNCCT என்ற இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரான எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்து சாட்சி–2–ன் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும், மேற்படி விபத்தினால் சாட்சி–2 சித்ரா என்பவருக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாகவும், மேற்படி குற்றத்திற்காக எதிரி மீது சட்டப் பிரிவுகள் 281, 125 (b) BNS – ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர் என எலச்சிபாளையம் காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளரால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

02) மேற்கண்டவாறு தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையை பரிசீலனை செய்து வழக்கை கோப்பிற்கு எடுத்துக்கொண்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும், இந்த வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களின் நகல்கள் யாவும் எதிரிக்கு பிரிவு 230 BNSS - ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

03) வழக்கு ஆவணங்களின் நகல்கள் குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு படித்து பார்க்க போதுமான அவகாசம் வழங்கப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்ட நபர் மீது சொல்லப்பட்டுள்ள குற்றங்கள் குறித்து வினவ போதுமான முகாந்திரங்கள் உள்ளன என்று இந்நீதிமன்றம் கருதியதால் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் மீது பிரிவுகள் 281, 125 (b) BNS – ன் கீழ் குற்றம் பற்றி வினவிய போது குற்றஞ்சாட்டப்பட்ட நபர் குற்றத்தை மறுத்து குற்றவாளி இல்லை என கூறினார். எனவே, இந்த வழக்கில் அரசு தரப்பை மெய்ப்பிக்க வேண்டி சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

<u>அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்</u>.–

04) இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1/கருப்பண்ணன் கொடுத்த புகாரினை பரிசீலனை செய்தபோது, புகாரில் கடந்த 20.12.2025–ம்தேதி

RANGARAJ P Digitally signed by RANGARAJ P Date: 2026.08.31 19:04:24 +0530

சனிக்கிழமை இரவு சுமார் 9.00 மணியளவில் தனது மனைவி சித்ரா வீட்டிலிருந்து டிபன் வாங்குவதற்காக கடைக்கு செல்ல எதிரே உள்ள திருச்செங்கோடு to இராசிபுரம் ரோட்டில் எலச்சிபாளையம் சண்முகா ஜவுளி ஸ்டோர் அருகே வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ரோட்டை கடக்க முயன்றபோது இராசிபுரம் to திருச்செங்கோடு ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த TN 34 AJ 9502 என்ற TVS Electric IQ – SMARTXOWNCCT என்ற இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து தன் மனைவியின் மீது மோதி கீழே விழுந்துகிடப்பதாக அக்கம்பக்கம் இருப்பவர்கள் தன் வீட்டிற்கு தகவல் சொல்லி தான் சென்று பார்த்தபோது தன் மனைவி சித்ராவிற்கு வலதுகால் பாதத்தில் பலத்த அடிபட்டும், இடதுகையில் அடிபட்டு சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டு கீழே கிடந்தார் என்றும், அக்கம்பக்கம் இருந்தவர்கள் உதவியுடன் அருகிலிருந்து தனியார் ஆம்புலன்ஸ் மூலம் குமரமங்கலம் சுவாமி விவேகானந்தா மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை செய்துகொண்டு மேல்சிகிச்சைக்காக ஒரு போக்குவண்டியில் மூலம் கோவை கங்கா மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும், தனது மனைவியின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கடந்த 23.12.2025–ம் தேதி அ.சா.1 எலச்சிபாளையம் காவல் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை திருச்செங்கோடு நகர காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.வருதராஜ் (அ.சா.6) அவர்கள் பெற்று மேற்படி புகாரின்பேரில் குற்ற எண்.204/2025, ச.பி.281, 125(a) ஆக முதல் தகவல் அறிக்கை/**அ.சா.ஆ.3** பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகாரை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

05) பின்னர் வழக்கு கோப்புகளை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினமே 17.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சம்பவஇட சாட்சிகள் கார்த்திக்/அ.சா.4, ரமேஷ்/பட்டியல் சாட்சி–6,

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.08.31 19:04:30 +0530

ஆகியோர்களை விசாரித்து சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர்/**அ.சா.ஆ.2** மற்றும் மாதிரி வரைபடம்/**அ.சா.ஆ.4** தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் கருப்பண்ணன்/அ.சா.1, சித்ரா/அ.சா.2, மனோகரன்/அ.சா.3, சண்முகம்/பட்டியல் சாட்சி–4 மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் நிலையம் ஆஜரான எதிரியை கைது செய்து தக்க பிணையில் விடுவித்துள்ளார்.

06) பின்னர் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனமான TN 34 AJ 9502 என்ற பதிவெண்கொண்ட TVS Electric IQ – SMARTXOWNCCT வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு ஆய்விற்கு வேண்டி வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்து, பின்னர் மேற்படி பேருந்தை மோட்டார் வாகன ஆய்வு செய்து ஆய்வறிக்கை வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.உமாமகேஸ்வரி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து மேற்படி வாகனத்தின் ஆய்வறிக்கையை/**அ.சா.ஆ.5** பெற்று தாக்கல் செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட சித்ரா என்பவருக்கு சிகிச்சையளித்த கோவை கங்கா மருத்துவமனை மருத்துவர் ராய்வில்சன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று/ **அ.சா.ஆ.6** ஆகியவற்றை பெற்று தாக்கல் செய்துள்ளார். பின்னர் மருத்துவர் வழங்கிய காயச்சான்றிதழில் சித்ரா என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கியுள்ளதால் சட்டப்பிரிவு 281, 125(a) BNS லிருந்து 281, 125(b) BNS ஆக சட்டப்பிரிவு மாறுதல்செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை/**அ.சா.ஆ.7** தயார்செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 281, 125(b) BNS ன் கீழ் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

07) இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல்

RANGARAJ P Digitally signed by RANGARAJ P
Date: 2026.08.31 19:04:38 +0530

அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பிலும் சான்று பொருட்கள் ஏதும் குறியிடப்படவில்லை.

08) அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து எதிரியை பிரிவுகள் 351(1)(ஆ) BNSS–ன்படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் பதில் கூறியுள்ளார்.

09) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது, அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

**தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:–**

10) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் எதிரி மீது அரசுத் தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களில் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

**தீர்வு**

11) எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளான பிரிவுகள் 281, 125(b) BNS - ன் கீழான குற்றத்தை நிரூபிக்க வேண்டுமென்றால், எதிரி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று விபத்து ஏற்படுத்தி, அந்த விபத்தின் மூலம் ஒருவருக்கு கொடுங்காயத்தை விளைவித்திருக்க வேண்டும். இவ்வழக்கு விபத்தின் காரணமாக அ.சா.2 சித்ரா என்பவருக்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது தெரியவருகிறது. இருப்பினும் அரசு தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்ட நபரான ரங்கநாதன் என்பவர் விபத்து சமயத்தில்

RANGARAJ P Digitally signed by RANGARAJ P Date: 2026.08.31 19:04:46 +0530

வாகனத்தை அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று அ.சா.2 –ன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினாரா என்பதை பொறுத்து கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியங்களை வைத்து தான் முடிவு செய்ய இயலும்.

12) இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில், கடந்த 20.12.2025–ம் தேதி இரவு 9.00 மணியளவில் தனது மனைவி டிபன் வாங்குவதற்காக ராசிபுரம் to திருச்செங்கோடு செல்லும் சாலையில் வடக்கிலிருந்து தெற்காக ரோட்டை கடக்க முயன்றபோது ராசிபுரம் பக்கமிருந்து வந்த எலக்ட்ரிக் பைக் அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக அங்கிருந்தவர்கள் தன்னிடம் வந்து தகவல் கூறினார்கள் என்றும், தகவல் கேள்விப்பட்டு தான் சம்பவ இடம் சென்று அவரை ஆம்புலன்ஸ் மூலம் விவேகானந்தா மருத்துவமனை அழைத்துச்சென்று அங்கு முதலுதவி சிகிச்சை பெற்றுக்கொண்டு மேல் சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாகவும், பின்னர் நடவடிக்கை எடுக்க வேண்டி காவல் நிலையம் சென்று புகார் அளித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

13) மேலும் அ.சா.1 தனது குறுக்குவிசாரணையில், விபத்து குறித்து தகவல் கேள்விப்பட்டு தான் தெரியும் என்றும், தான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 கண்ணுற்ற சாட்சி அல்ல. அவர் சம்பவம் குறித்து கேள்விப்பட்டு தான் தனக்கு தெரியும் என்று சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரியை அடையாளப்படுத்தியோ, எதிரியை சம்பவ இடத்தில் பார்த்ததாகவோ குறிப்பிட்டு எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும் தனது மனைவி சாலையை கடக்க முயன்றபோது விபத்து ஏற்பட்டதாக சாட்சியமளித்துள்ளார். எனவே அ.சா.1–ன் சாட்சியம் எதிரி மீதான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யும் வகையில் இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

RANGARAJ P Digitally signed by RANGARAJ P
Date: 2026.08.31 19:04:53 +0530

14) இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 20.12.2025-ம் தேதி இரவு 9.00 மணியளவில் தான் டிபன் வாங்குவதற்காக ராசிபுரம் to திருச்செங்கோடு செல்லும் சாலையில் வடக்கிலிருந்து தெற்காக ரோட்டை கடக்க முயன்றபோது ராசிபுரம் பக்கமிருந்து வந்த எலக்ட்ரிக் பைக் வேகமாக வந்து தன் மீது மோதிவிட்டதாகவும், தான் சுழன்று கீழே விழுந்துவிட்டதாகவும், தனக்கு காலில் பலத்த காயம் ஏற்பட்டதாகவும், பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் விவேகானந்தா மருத்துவமனை அழைத்துச்சென்றதாகவும், அங்கு முதலுதவி சிகிச்சை பெற்றுக்கொண்டு மேல் சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

15) மேலும் அ.சா.2 தனது குறுக்குவிசாரணையில், விபத்து நடந்தது இரவு 9 மணி இருக்கும் என்றும், தான் தனது வீட்டிலிருந்து ரோட்டை வடக்கிலிருந்து தெற்கு நோக்கி கடந்தபோது விபத்து ஏற்பட்டது என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1-ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் எதிரி சம்பவத்தன்று அதிவேகமாக வாகனத்தை ஓட்டிவந்ததாக சாட்சியமளிக்கவில்லை. தனது முதல்விசாரணையில் தான் ரோட்டை கடக்க முயன்றபோது விபத்து ஏற்பட்டதாகவும், தனது குறுக்குவிசாரணையில் ரோட்டை கடந்தபோது விபத்து ஏற்பட்டதாகவும் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.ஆ.4 பார்வை மகஜரை பார்வையிட்டதில் சம்பவ இடமானது இராசிபுரம் to திருச்செங்கோடு ரோட்டில் தென்புற பகுதியில் ஏற்பட்டதாக காட்டப்பட்டுள்ளது. எனவே அ.சா.2 சாலையை கடந்தபோது தான் விபத்து ஏற்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும் இரவு நேரத்தில் எதிரி அவரது பாதையில் வந்துகொண்டிருக்கும்போது திடீரென ஒரு நபர் சாலையை குறுக்காக கடப்பார் என்று எதிர்பார்த்து வாகனம் ஓட்டியிருக்க முடியாது என்று

RANGARAJ P
Digitally signed by RANGARAJ P
Date: 2026.08.31 19:04:59 +0530

இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே அ.சா.2–ன் சாட்சியத்தைக்கொண்டு எதிரியின் அஜாக்கிரதை காரணமாக இவ்விபத்து ஏற்பட்டது என்று முடிவுசெய்ய இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

16) மேலும் இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.3 மற்றும் அ.சா.5 ஆகியோர் இவ்வழக்கு விபத்தை நேரடியாக பார்த்ததாக சாட்சியமளிக்கவில்லை. மாறாக சத்தம்கேட்டு சென்று பார்த்ததாக சாட்சியமளித்துள்ளனர். எனவே அ.சா.3 மற்றும் அ.சா.5 ஆகியோர் இவ்வழக்கு விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பது தெரியவருகிறது. எனவே அ.சா.3, அ.சா.5–ன் சாட்சியம் எதிரி மீதான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யும் வகையில் இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

17) இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.4 தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், மேற்படி கையெழுத்தை கடந்த 12–வது மாதத்தில் ஒரு நாள் ராசிபுரத்திலிருந்து திருச்செங்கோடு செல்லும் சாலையில் சண்முகா ஜவுளி ஸ்டோர் அருகே நடந்த விபத்து சம்பந்தமாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும், அதற்கு சாட்சியாக தான் கையெழுத்து செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.4 தனது குறுக்குவிசாரணையில், தான் வரைபடம் வரைந்த தாளில் தான் கையெழுத்து செய்ததாகவும், போலீசார் கையெழுத்து போட சொன்னதால் கையெழுத்து செய்ததாகவும் தெரிவித்துள்ளார். அ.சா.4 –ன் சாட்சியத்தின் மூலம் போலீசார் சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார்செய்துள்ளது தெரியவருகிறது.

RANGARAJ P Digitally signed by RANGARAJ P Date: 2026.08.31 19:05:04 +0530

18) மேலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.6/வருதராஜ் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் தனது சாட்சியத்தில், இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1/கருப்பண்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்து வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு, சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தது பற்றியும், பின்னர் எதிரியை கைதுசெய்து பிணையில் விடுவித்ததாகவும், மேலும் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பி வைத்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றது பற்றியும், இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.2–க்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்றது பற்றியும், பின்னர் அ.சா.2–க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பதால் சட்டப்பிரிவு மாறுதல் செய்தது பற்றியும், வழக்கு புலன் விசாரணையை முடித்து இறுதியறிக்கை தாக்கல் செய்தது பற்றியும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.6–ன் சாட்சியம் அவர் மேற்கொண்ட புலன்விசாரணை குறித்து மட்டுமே உள்ளதே தவிர எதிரியை இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் தொடர்புபடுத்தும் வகையில் அமையவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

19) இவ்வழக்கு விபத்தை நேரடியாக பார்த்ததாக கண்ணுற்ற சாட்சிகள் சாட்சியமளிக்காத நிலையிலும், அ.சா.2 சாலையை கடந்தபோது விபத்து ஏற்பட்டதாக சாட்சியமளித்துள்ள நிலையில் உண்மையில் யாருடைய கவனக்குறைவு அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்று அரசுதரப்பில் தெளிவுபடுத்தவில்லை. எனவே உண்மையிலேயே அரசுதரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல் வழக்கு சம்பவம் நடைபெற்றதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

RANGARAJ P Digitally signed by RANGARAJ P Date: 2026.08.31 19:05:10 +0530

20) எனவே அரசு தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்ட நபரான ரங்கநாதன் என்பவர் விபத்து சமயத்தில் தான் ஓட்டிச்சென்ற வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று அ.சா.2 –ன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி அ.சா.2–க்கு கொடுங்காயம் ஏற்படுத்தியதாக போதுமான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

21) முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து இவ்வழக்கின் எதிரி மீது பிரிவுகள் 281, 125 (b) BNS - ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து, பிரிவு 278(1) BNSS –ன் கீழ் எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

22) எதிரி இவ்வழக்கில் எழுதிக்கொடுத்த பிணைமுறி பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31–ம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரபட்டது.

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.08.31 19:05:16 +0530

நீதித்துறை நடுவர்,
திருச்செங்கோடு.

<u>அரசு தரப்பு சாட்சிகள்.–</u>

| Prosecution Witness No | Name of Witnesses | Description |
|---|---|---|
| அ.சா.1/LW1 | திரு.கருப்பண்ணன் | புகார்தாரர் |
| அ.சா.2/LW2 | திருமதி.சித்ரா | காயம்பட்ட சாட்சி |
| அ.சா.3/LW3 | திரு.மனோகரன் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4/LW5 | திரு.கார்த்திக் | பார்வை மகஜர் சாட்சி |

| | | |
|---|---|---|
| அ.சா.5/LW4 | திரு.சண்முகம் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.6/LW9 | திரு.வருதராஜ் | புலன்விசாரணை அதிகாரி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்.–</u>**

| **Exhibit No** | **Description of the Exhibit** | **Proved by / Attested by** |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் | அ.சா.1 – 24.06.2026 |
| அ.சா.ஆ.2 | பார்வை மகசர். | அ.சா.4 – 14.07.2026 |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை. | அ.சா.6 – 17.08.2026 |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம். | அ.சா.6 – 17.08.2026 |
| அ.சா.ஆ.5 | TN 34 AJ 9502 என்ற வாகனத்தின் மோட்டர் வாகன ஆய்வறிக்கை | அ.சா.6 – 17.08.2026 |
| அ.சா.ஆ.6 | அ.சா.2–ன் காயச்சான்றிதழ் | அ.சா.6 – 17.08.2026 |
| அ.சா.ஆ.7 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.6 – 17.08.2026 |

அரசு தரப்பு சான்று பொருள்.– இல்லை.

குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தரப்பு சாட்சி, சான்றாவணம்.– இல்லை.

RANGARAJ P Digitally signed by RANGARAJ P Date: 2026.08.31 19:05:26 +0530

நீதித்துறை நடுவர்,
திருச்செங்கோடு.

<u>குறிப்பு.–</u>

1. எந்தவொரு சாட்சியும் மூன்று தினங்களுக்குமேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.
2. வழக்கு விசாரணையின்போது குற்றஞ்சாட்டப்பட்ட நபர் பிணையிலிருந்தார்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE**

CASE SUMMARY- STC.No.155/2026

<table>
<tr><th>S.No.</th><th>Description</th><th>Remarks</th></tr>
<tr><td>1.</td><td>Period of Remand of the Accused</td><td>Bailed by police (09.01.2026)</td></tr>
<tr><td>2.</td><td>The Date of Filing of the Complaint/Final Report of the Court</td><td>Complaint 23.12.2025<br>Final Report on 07.04.2026</td></tr>
<tr><td>3.</td><td>The Date of Committal of the Case to the Court of Session</td><td>Nil</td></tr>
<tr><td>4.</td><td>The Date of Questioning of the Accused under section 274 BNSS, as the case maybe</td><td>15.05.2026</td></tr>
<tr><td>5.</td><td>Filing of Miscellaneous Petitions an their results on challenge before superior Court. Except routine petitions like petitions Under Section 317 of the Code</td><td>Nil</td></tr>
<tr><td>6.</td><td>Date of examination in-chief and cross-examination of a Witness</td><td><table>
<tr><th>Witness</th><th>Chief</th><th>Cross</th></tr>
<tr><td>PW.1</td><td>24.06.2026</td><td>24.06.2026</td></tr>
<tr><td>PW.2</td><td>14.07.2026</td><td>14.07.2026</td></tr>
<tr><td>PW.3</td><td>14.07.2026</td><td>14.07.2026</td></tr>
<tr><td>PW.4</td><td>14.07.2026</td><td>14.07.2026</td></tr>
<tr><td>PW5</td><td>20.07.2026</td><td>20.07.2026</td></tr>
<tr><td>PW6</td><td>17.08.2026</td><td>17.08.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>7.</td><td>Date of examination of the Accused under section 351(1)(b) of the BNSS</td><td>28.08.2026</td></tr>
<tr><td>8.</td><td>Details of abscondence of an Accused and his appearance/production, as the case maybe</td><td>Nil</td></tr>
<tr><td>9.</td><td>Grant of stay by Superior Courts and the results thereof</td><td>Nil</td></tr>
</table>

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.08.31 19:05:32
+0530

Judicial Magistrate,
Tiruchengode.